**செய்தி வெளியீடு எண்.598** **நாள்.20.9.2007**

**செய்தி வெளியீடு**

பதிவுத் துறையில் 01.08.2007 முதல் அமல்படுத்தப்பட்ட சீரமைக்கப்பட்ட சொத்துக்களின் வழிகாட்டி மதிப்புகளைச் செயல்படுத்துவதை அரசு தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளதாகவும் மேலும் பதிவு செய்து திருப்பி அளிக்கப்படும் ஆவணங்கள் திருப்பி அளிப்பதில் காலதாமதம் ஆவதாகவும் தினமணி நாளேட்டில் செய்தி வந்துள்ளது.

01.08.2007 முதல் பதிவுத் துறையில் அமல்படுத்தப்பட்ட சீரமைக்கப்பட்ட சொத்துக்களின் வழிகாட்டி மதிப்புகளை நடைமுறைப்படுத்துவதை நிறுத்தி வைத்து எந்த ஆணையும் அரசாலோ அல்லது பதிவுத் துறைத் தலைவராலோ பிறப்பிக்கப்படவில்லை. மேலும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களைத் திருப்பி அளிப்பதில் எவ்வித காலதாமதமும் இல்லை.

*****

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை—9.